உ

சிவ சிவ

# மாசி மக மலர்

‘மூர்த்திதலந் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே’

—தாயுமான சுவாமிகள்

ஸ்ரீ காசி மடம் 1954 திருப்பனந்தாள்

## திருப்பனந்தாள்

## ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

—oo—

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... ... | 0 | 1 |
| 2 | ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகள் பிரபந்தத் திரட்டு - டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... ... | 6 | 0 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 | 0 |
| 4 | திருஞான சம்பந்தர் தேவாரம் ... ... | 2 | 8 |
| 5 | திருநாவுக்கரசர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 6 | சுந்தரர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 7 | திருவாசகம் ... ... | 0 | 6 |
| 8 | திருக்கோவையார்–பேராசிரியர் உரை ... | 2 | 0 |
| 9 | ஒன்பதாம் திருமுறை–திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ... ... | 0 | 9 |
| 10 | திருமந்திரம் ... ... | 1 | 3 |
| 11 | பதினோராந் திருமுறை ... ... | 1 | 4 |
| 12 | அம்மையார்–அற்புதத் திருவந்தாதி ... | 0 | 4 |
| 13 | திருக்கைலாய ஞானவுலா ... ... | 0 | 8 |
| 14 | பெரிய புராணம் ... ... | 2 | 8 |
| 15 | அகத்தியர் தேவாரத்திரட்டு குறிப்புரை ... | 0 | 6 |
| 16 | திருவிளையாடற் புராணம் ... ... | 3 | 0 |
| 17 | தாயுமான சுவாமிகளின் பாடல் ,, ... | 1 | 4 |
| 18 | கந்தபுராணச் சுருக்கம் ,, ... | 1 | 12 |
| 19 | கந்தபுராணம்–முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 2 | 12 |
| 20 | ஷை யுத்த காண்டம் தேவ காண்டம் ... | 1 | 12 |
| 21 | ஷை தக்ஷ காண்டம் குறிப்புரை ... ... | 1 | 8 |
| 22 | கந்தபுராண வசனம் ... ... | 2 | 8 |
| 23 | கந்தர் அலங்காரம் குறிப்புரை ... ... | 0 | 4 |
| 24 | கந்தர் அனுபூதி ஷை ... ... | 0 | 2 |
| 25 | கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... | 0 | 6 |
| 26 | கந்தர் கலிவெண்பா–மூலம் மட்டும் ... | 0 | 1 |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

உ
செந்திலாண்டவன் துணை

# மாசி மக மலர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**
அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி

ஸ்ரீ காசிமடம் ஜூனியர்
**ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்**
அவர்களால் வெளியிடப்பெற்றது

பதிப்பாசிரியர் :
**வித்துவான் கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L.,**
பிரின்ஸிபால், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

**விசய ஆண்டு மாசி மகம்**

உரிமைப் பதிவு]

[பிப்ரவரி 1954

# உள்ளுறை

—oo—


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | குடந்தை மூர்த்தி தலந் தீர்த்தச் சிறப்பு ... | 1 |
| II. | திருக்குடந்தைத் தேவாரப்பதிகங்கள் ... | 5 |
| III. | ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குடந்தையில் நிறுவியுள்ள தரும சாசனங்களின் விவரம் ... | 17 |
| IV. | திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (தமிழ் நாடு முதலிய இடங்களில் பற்பலவற்றிற்கு) அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகளின் விவரம் ... | 35 |
| V. | குடந்தையில் நிறுவிய தருமங்களின்படிக்கு ஸ்ரீகாசிமடத்துப் பரிசுகள் பெற்றவர் விவரம் ... | 44 |
| VI. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு ... | 45 |
| VII. | சகல கலாவல்லி மாலை ... | 46 |
| VIII. | கந்தர்கலி வெண்பா ... | 49 |

# பதிப்புரை

“ தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!”

மாசித் திங்களில் மகம் சிறந்த நாள். இந்நாட் சிறப்பைத் திருக்குடந்தையில் நன்கு அறியலாம். மகாமகம் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை வருவது. இதன் சிறப்பையும், சைவ சமயாசாரியார் திருக்குடந்தையில் அருளிய தேவாரப்பதிகங்களை யும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாற்றையும், அவர்கள் அருளிய கந்தர் கலிவெண்பாவையும், சகலகலாவல்லி மாலையையும் மக்கள் அறிந்து பயன் பெறவேண்டுமென்ற அருள் நோக்கங் கொண்டு, **மாசி மக மலர்** என்னும் இச்சிறு இதழ் புத்தக வடிவில் **விசய ஆண்டு மாசி மக நன்னாளாகிய இன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து இலவச வெளியீடாக** வெளி வருகின்றது.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** இதுவரை சைவ சமயத்திற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும், ஏனைய பொதுநலங்கட்கும் வழங்கியருளிய அருட்கொடைகளைத் தமிழுலகம் நன்கு அறியும். ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இதுவரை செய்துள்ள தருமங்களின் விவரங்களை இந் நூல் 4-ஆம் பகுதியினுள் காணலாகும். இன்னும், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பிற அறங்களுக்காக நாளும் அளவற்ற பொருளை வழங்கி அருளுகின்றார்கள். திருக்குடந்தை ஆதி கும்பேசுவரர் திருவருட் பெருக்கைச் சைவ நன் மக்கள் எளிதிற்பெற்று நற்பேறு அடையவேண்டும் என்ற திருவுளங் கொண்டு, மாசி மக மலராகிய இச்சிறு இதழை இலவசமாக வழங்க ஆணை தந்தருளியது சைவ உலகம் மிகப் பாராட்டிப் போற்றுதற் குரியதாகும். அவர்களின் அருட்கொடை என்றும் சிறப்புற்று மிளிர்வதாக.

திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக் குடந்தைக் காரோணம் ஆகிய இவற்றின் தேவாரப் பதிகங்

கட்கும், சகல கலா வல்லி மாலைக்கும் குறிப்புரை எழுதியுதவிய என் நண்பர் திரு. வித்துவான் **தீ. பட்டுச்சாமி ஓதுவார்** அவர் கட்கும், அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கிய என் நண்பர் திரு. வித்துவான் **கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

இச்சீரிய பணியை அடியேனுக்கு வழங்கியருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கட்கும்**, அவர்கள் அருள்வழி நின்று இந் நூலை வெளியிட்டருளும் ஸ்ரீ காசி மடத்து ஜூனியர் **ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும்** அடியவன் மனமொழி மெய்களால் வந்தித்து வழிபாடு இயற்றுங் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்,

*செந்தமிழ்க் கல்லூரி,*
*திருப்பனந்தாள்,*
*18—2—'54*

**கே. எம். வேங்கடராமையா,**
M. A., B. O. L.
*Principal.*

உ

செந்திலாண்டவன் துணை

# மாசி மக மலர்

—oo—

**ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் துதி**

"பூமேய ஆரணனும் நாரணனும் வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரும் மண்ணவரும் பதமுதலாஞ் சிறப்பு நல்கி
மாமேய குடமூக்கின் இடமூக்கின் பாற்கருணை வடிவின் மேய
பாமேய புகழாதி கும்பேசர் தாமரைத்தாள் பணிந்து வாழ்வாம்"

— **திருக்குடந்தைப் புராணம்**

---

## I குடந்தை மூர்த்தி தலந் தீர்த்தச் சிறப்பு

### திருக்குடந்தைத் தலம்

குடந்தை என மருவி வழங்கப்பெறும் தலமாகிய **கும்ப கோணம்** தேவாரங்களில் **குடமூக்கு** எனக் குறிக்கப் பெற்றுளது. இஃது ஒரு பேரூழி நீர்ப்பெருக்கின்போது எல்லா உயிர்களையும் ஒருசேரக் கொண்டு வைக்கப்பட்டிருந்த அமுத குடத்தை இறைவன் வேட வடிவுகொண்டு வந்து அம்பினால் அடித்தபோது உடைந்த மூக்கின் வழியாக அமிர்தம் நாற்புறமும் பரவிநின்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது என்பர். (கோணம்-மூக்கு.) இத்தலத்தைச் சேக்கிழார் சுவாமிகளும் **"நாற்றிசையோர் பரவு திருக்குடமூக்கு"** எனப் புகழ்ந்துள்ளனர். இதற்குப் **பாஸ்கர க்ஷேத்திரம்**[1] என்ற ஒரு பெயரும் உண்டு.

இத்தலம் **மூர்த்தி, தலம், தீர்த்தம்** என்ற இம் மூன்றினாலும் சிறப்புற்றுத் திகழ்வது; பிரமனும், இந்திரனும், சூரியனும் காசிபமுனிவரும், சுதன்மன், ஞானவான் என்ற அந்தணர்களும்,

---

1 மலையையேனும் அல்லது நதியையேனும் அடுத்துள்ள ஸ்தலத்தில் பிரமன், திருமால், உருத்திரன் என்ற மும்மூர்த்திகளும் இருந்து, சூரியனால் அம்மூர்த்திகள் பூசிக்கப்பட்டால் இப்பெயர் பெறும் என நூல்கள் கூறும்.

கிருதவீரியன், வீரவர்மன் முதலிய அரசர்களும் பூசித்து நற்பேறு பெறுதற்கு இடமாக விளங்கியது. அன்றியும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய **மூர்க்க நாயனுர்** மாகேசுர பூசை செய்து வீடு எய்திய தலமும் இதுவேயாகும்.

மேலும் இத்தலம், **பஞ்சக் குரோசத் தலங்கள்** எனப்படும் திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், தாரேச்சுரம், சுவாமிமலே, பாடலவனம் (கருப்பூர்) என்ற சிவத்தலங்களால் சூழப்பட்ட பெருமையுடையதாகும்.

**சிவபெருமான் திருக்கோயில்கள்**

திருஞானசம்பந்த சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்ற திருக்கோயில்கள் மூன்று குடந்தையில் உள்ளன. அவை (1) குடமூக்கு (ஆதி கும்பேசுவரர் கோயில்), (2) குடந்தைக் கீழ்க் கோட்டம் (நாகேசுவரர் கோயில்), (3) குடந்தைக் காரோணம் (காசி விசுவநாதர் கோயில்) என்பனவாம். இங்குப் படைப்புக் காலத்திலேயே இறைவன் முதலில் தம் திருக்கையாலேயே அமிர்தகுடத்தில் தாம் உண்டான காரணத்தால், **ஸ்ரீ ஆதிகும்பேசுவரர்** எனவும், அமிர்தம் நிறைந்த இடத்தில் உண்டான காரணத்தால் **அமுதலிங்கேசர்** எனவும் பெயர் பெற்றனர். இங்கு, உமாதேவியார் **மங்களாம்பிகை** என்ற திருநாமம் பூண்டு, மந்திரபீடத்தில் எழுந்தருளி அடியார்கட்கு அருள்புரிகின்ருள். அதனுல், மங்களாம்பிகை **மந்திர பீடேசுவரி** எனவும் பெயர் பெறுகின்ருள்.

இத்தலத்தில் நாகேசுவரர், காரோணர் (காசி விசுவநாதர், சோமேசர்) திருக்கோயில்களே அன்றி, அபிமுகேசர், கவுதமேசர் பாணபுரீசர், ஆராவமுதர், ஆதிவராகர், சாரங்கபாணி, சக்கரபாணி, வரதர் முதலான சிவ, விஷ்ணு திருக்கோயில்களும் சிறப்புடன் விளங்குவன ஆகும்.[1]

---

1 " இடைமருதர் முதலாஓர் ஐவர்நா கேசர், நடம் இயற்ற வல்லார்
கடையணுகாச் சோமேசர், காரோணர், அபிமுகர்நற் கவுத மேசர்
தடையிலருட் பாணபுரி யார்சுதரி சனர்சார்ங்க தரர்,வ ராகர்
அடைவரதர் இவர்சூழ அமர்கும்ப லிங்கேசர் அடிகள் போற்றி"

— **திருக்குடந்தைப் புராணம்**

**தீர்த்தங்கள் : மகாமகத் தீர்த்தம்**

இத்தலத்துள், பதினுன்கிற்கு மேற்பட்ட தீர்த்தங்கள் அமைந்துள்ளன.[1] அவற்றுள், தம்முள் மூழ்கிஞேருடைய பாவங்கள் அனைத்தையும் போக்கவல்ல **கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, வேகவதி** முதலான ஒன்பது பெருந் தீர்த்த மாதாக்களும் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு வந்து நீராடும் பெருஞ் சிறப்பினையுடைய **மகா மகத் தீர்த்தமே** மிக முக்கியமானதாகும். முற்கூறிய அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒரு பகுதி[2] இதனுள் தங்கித் தீர்த்தமாயிற்று என்பது புராண வரலாறு ஆகும்.

இதன் பெருமையினைப் "பூமருவும் கங்கைமுதற்புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங் கோயில்" எனச் சேக்கிழார்பெருமானும் சிறப்பித்தருளியுள்ளார்.

**மகாமகத் தீர்த்தத்தின் வேறு பெயர்கள்**

இத்தீர்த்தத்துள் அமுதம் தங்கிய காரணத்தால் **அமுத தீர்த்தம்** என்றும், மகாமகத்திற்கு ஓராண்டிற்கு முன்னரே எல்லாத் தீர்த்தங்களும் ஒருங்கு வந்து சேருங் காரணத்தால் **பகு தீர்த்தம்** என்றும், தீர்த்த மாதாக்கள் கன்னியர்களாக வந்து நீராடிப் பேறு பெற்றமையால் **கன்னியா தீர்த்தம்** என்றும், குரு சிம்ம ராசியில் வரும் மாசி மகத்தில் யாவரும் நீராடிப் பெரும் பேறடையுங் காரணத்தால் **மகாமகத் தீர்த்தம்** என்றும் கூறப் பெறும். **மகாமகப் புண்ணிய காலம்**[3] பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை வரும்.

---

1. "தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
   சரசுவதிபொற் ருமரைபுட் கரணி தெண்ணீர்க்
   கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
   குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்த ஞரே"

   **-திருநாவுக்கரசர் தேவாரம்**

2. மற்ருெரு பகுதி பொற்ருமரைத்தீர்த்தம் என்பர்.

3. தேவ குருவாகிய பிரகஸ்பதி சிம்ம ராசியை அடைந்து, அந்தச் சிம்ம ராசிக்குரிய சூரியன் தன் மகன் சனியின் வீடுகளுள் கும்ப ராசியாகிய ஏழாமிடஞ் சார்ந்து நிற்க, மக நட்சத்திரத்தில் பௌர்ணமியன்று சந்திரன்

**மகாமகக் குளத்திலுள்ள தீர்த்தங்கள்**

மகாமகக் குளத்தினுள் நாற்புறங்களிலும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், கோதாவரி, காவிரி, கன்னியா குமரி, தாமிரபருணி, சரயு, கங்கை, பிரமன், யமுனை, சிந்து, நர்மதை முதலான தீர்த்தங்களும், குளத்தின் நடுவில் கன்னி தீர்த்தம் முதலான அறுபத்தாறு தீர்த்தங்களும் அமைந்து இருக்கின்றன என்று தல புராணம் கூறும்.

**மகாமகத் தீர்த்தச் சிறப்பு**

மகாமக நாளன்று இம்மகா மகத் தீர்த்தத்துள் விதிப்படி மூழ்கினவர் கங்கை முதலிய தீர்த்தங்களில் மூழ்கின பலனை ஒருங்கே அடைந்து பேறு பெறுவர். இவ்வாறே, மகாமகம் வருகின்ற நாளாகிய ஒவ்வொரு **மாசி மகமும்** இத்தகைய பெருஞ் சிறப்பினை எய்தியுள்ளதால், மாசி மாத மகநாளில் இத் தீர்த்தங்களில் நீராடி இறைவனைத் தரிசித்து நற்பேறு பெறுதல் மனிதப்பிறவி எடுத்ததன் பெரும்பயனாகும்.

"மூர்த்திதலந் தீர்த்தம்
முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

—**தாயுமான சுவாமிகள்**

**சிவ நாமமே உலகெலாம் பரவுக !**

---

**வந்து சிம்ம ராசியில் நிற்கிற குருவுடன் சேர, இவ்விருவரையும் சூரியனும், சூரியனை இவ்விருவரும் முழுப் பார்வையுடன் பார்க்கும் நாளில் வருவதே மகாமகப் புண்ணிய காலம் ஆகும்.**

## II திருக்குடந்தைத் தேவாரப்பதிகங்கள்

— o —

### திருக்குடமூக்கு*

### திருஞானசம்பந்த சுவாமிகள்

**தேவாரம்**

**பண்-பஞ்சமம் [ 3-ஆம் திருமுறை ]**

திருச்சிற்றம்பலம்

அரவிரி கோடனீட லணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன் குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி இருந் தானவன் எம்மிறையே. 1

ஓத்தர வங்களோடும் ஓலி காவிரி யாற்றயலே
பூத்தர வங்களோடும் புகை கொண்டடி போற்றிநல்ல
கூத்தர வங்களோவாக் குழ கன்குட மூக்கிடமா
ஏத்தர வங்கள்செய்ய இருந் தானவன் எம்மிறையே. 2

மயில்பெடை புல்கியால மணல் மேல்மட அன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங் காவிரிப் பைம்பொழில்வாய்க்
குயில்பெடை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
இயலொடு வானமேத்த இருந் தானவன் எம்மிறையே. 3

மிக்கரை தாழவேங்கை யுரி யார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமையேன மருப் போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேத்த இருந் தானவன் எம்மிறையே. 4

---

* திருக்குடமூக்கு - கும்பகோணம்; ஆதி கும்பேசுவரர் கோவில்.

1. அரவிரி கோடல் - பாம்பின் படம் போல மலரும் வெண்காந்தள், மௌவல் - முல்லை. குர - குரா; குராமரம். குழகன் - சிவன்.

2. ஓத்து அரவங்கள் - வேத ஒலிகள். ஓவா - நீங்காத. ஏத்து-துதி.

3. ஆல - ஆட. பண்செய் - இசை பாடும். வானம் - வானவர்; ஆகு பெயர்.

4. அரை - இடை. வேங்கையுரி - புலித்தோல். ஆர்த்தல் - அணிதல். அக்கு - சங்குமணி. ஏன மருப்பு - பன்றிக்கொம்பு. கொக்கரை - ஒரு வாத்தியம். எக்கரையாரும் - எத்திசையாரும்.

வடிவுடை வாள்தடங்கண் உமையஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூட உரி கொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடமோங்குங் குழகன்குட மூக்கிடமா
இடிபடு வானமேத்த இருந் தானவன் எம்மிறையே. 5

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ் காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல பலவின்கனி கள்தயங்கும்
குழைவளர் சோலை சூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடும் இருந் தானவன் எம்மிறையே. 6

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந் தானெழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத் தான்புர மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி இருந் தானவன் எம்மிறையே. 7

நெடுமுடி பத்துடைய நிகழ் வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பரு மால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்குதெங்கு பழம் வீழ்குட மூக்கிடமா
இடுமணல் எக்கர்சூழ இருந் தானவன் எம்மிறையே. 8

ஆரெரி ஆழியானும் மல ரானும் அளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம் பாமதி சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழகன்குட மூக்கிடமா
ஈரிரு கோவணத்தோ டிருந் தானவன் எம்மிறையே. 9

---

5. வாரணம் - யானை, கயமுகாசுரன். பொடி - திருநீறு.

6. கழை - மூங்கில். கவ்வை - ஒலி. கமழ்தல் - விளங்குதல். குழை-தளிர். இழை வளர் மங்கை - உமை; மங்களாம்பிகை.

7. மலைமலி மங்கை - பார்வதிதேவி. வையம் - உலகத்தவர்; பக்குவான்மாக்கள். இலை மலி சூலம் - இலை வடிவில் அமைந்த சூலம். புரம் - முப்புரம்.

8. நெடுமுடி.........அரக்கன் - இராவணன். பருமால் வரை - கயிலைமலை; கொடுமடல் - வளைந்த மடல்; தெங்கு பழம் - தேங்காய். மணல் எக்கர் - மணல் மேடு.

9. ஆர் எரி ஆழியான் - பிரகாசம் நிறைந்த சக்கரத்தை ஏந்தியவன்; திருமால். மலரான் - பிரமன். நிரம்பா மதி - பிறைச்சந்திரன். கூர் எரியாகி நீண்ட குழகன் - சோதி வடிவாக நின்ற இறைவன். ஈரிரு கோவணம் - நான்கு வேதங்களே கோவணம், 'மறையே நமது கோவணமாம்' என்பது திருவிளையாடற் புராணம்,

மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லாம் நயந் தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடை யான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந் தானவன் எம்மிறையே. 10

வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் **தமிழ் ஞானசம் பந்தன்**நல்ல
தண்குட மூக்கமர்ந்தான் அடி சேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப் பெய்துவர் வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### தேவாரம்

### திருக்குறுந்தொகை [ 5-ஆம் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

பூவ ணத்தவன் புண்ணியன் நண்ணிஅங்(கு)
ஆவ ணத்துடை யான்அடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. 1

---

10. சீவரத்தர்,முதுமட்டையர், மோட்டமணர்-இவை சமணர், சாக்கியர் முதலானோரைக் குறிப்பன. குன்றமெல்லா முடையான் - மலைக்கோயில்களை இடமாக உடைய சிவபெருமான். மலைக்கோயில்கள் : திருவாட்போக்கி, திருஈங்கோய்மலை, திருசிராமலை, திருவெறும்பியூர் முதலியனவாகும். ஏடு - இதழ்.

11. விறல் - ஆற்றல். வெங்குரு - சீகாழி ; சுக்கிரன் பூசித்துத் தேவ குருவுக்கு இணையாகப் பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. வெங்குரு நகரான் - ஞானசம்பந்தர். வீடு - முத்தி.

1. பூவணத்தவன் - பூ வண்ணத்தவன் ; பூவின் மணம் போன்று எங்கும் இன்புற நிறைந்தவன் ; திருப்பூவணத்தில் திருக்கோயில் கொண்டவன் எனினுமாம். ஆவணம் - ஓலை ; இங்கு அடிமை ஓலையைக் குறித்தது. தீவணம் - தீப்போன்ற நிறம் ; செந்நிறம். தீவணத் திருநீறுமெய்பூசி - நீறு பூத்த நெருப்பைப் போன்று, திருநீற்றைச் செந்நிறமேனிமுழுதும் பூசி.

பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினே
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டியுறை யுங்குட மூக்கிலே. 2

நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொா டறுபதந் தாழ்சடைக்
**கங்கை யாளவள் கன்னி யெனப்படும்**
**கொங்கை யாள்**உறை யுங்குட மூக்கிலே. 3

ஓதா நாவன் திறத்தை உரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் **மியமுனை**
சேதா ஏறுடை யான்அமர்ந் தவிடம்
**கோதா விரியுறை** யுங்குட மூக்கிலே. 4

நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுறை வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே. 5

**துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்**
**பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்**
மறவ னாய்ப்பார்த்தன் மேற்கணை தொட்டஎங்
குறவ னார்உறை யுங்குட மூக்கிலே. 6

---

2. பூமியீர் - பூமியில் உள்ள மக்களே ; விளி. பூத்து ஆடிக்கழியாது - தோன்றி விளங்கி அழிதலாகிய வினைகளைச் செய்யாது. நீத்தாடி - அழலாடி; சிவபெருமான். வேர்த்து - கோபித்து. விசை - வேகம் ; ஆற்றல்.

3. அறுபதம் - வண்டு. கன்னி - காவிரி. மகாமகத் தீர்த்தத்துள் அடங்கியுள்ள நதி மாதாக்களுள் இங்குக் கங்கையும் காவிரியும் கூறப்பட்டுள்ளன.

4. ஓதா நாவன் - இயல்பாகவே ஞானமுடையவன் ; தான் பிறரைத் துதிக்காத நாவுடையவன் எனினும் ஆம். ஏதானும் இனிதாகும் - தீமையிலும் நன்மையாக முடியும். சேதா ஏறு - இடபம். இப்பாடலில் யமுனை, கோதாவரி என்ற ஏனைய இரு தீர்த்தங்களும் கூறப்பட்டுள்ளன.

5. நக்கர் ஐயன் - நக்கரையன் - சிவபெருமான். வக்கரை - ஒரு தலம். அக்கரை - அவசியம்.

6. மறவன் - வேடன் ; கிராத மூர்த்தி, பார்த்தன் - அர்ச்சுனன். தொட்ட - தொடுத்த.

தொண்ட ராகித் தொழுது பணிமினே
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே. 7

**காமி யஞ்செய்து காலங் கழியாதே**
**ஓமி யஞ்செய்தங் குள்ளத் துணர்மினே**
**சாமி** யோடு **சரச்சு வதி**யவள்
**கோமி** யும்உறை யுங்குட மூக்கிலே. 8

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னார்உறை யுங்குட மூக்கிலே. 9

அன்று தானரக் கன்கயி லாயத்தைச்
சென்று தானெடுக் கஉமை அஞ்சலும்
நன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. 10

திருச்சிற்றம்பலம்

---

**சுவாமி** - கும்பேசுவரர்; **தேவி** - மங்களாம்பிகை.

---

7. பண்டை வல்வினை - பழய வலிய வினை. விண்டவர் - வேறுபட்டவர். விண்டவர்புரம் - திரிபுரம்,

8. காமியம் - உலகில் விரும்பியவை. ஓமியம் - அகத்தும் புறத்தும் செய்யும் ஓம காரியங்கள். சாமி - கன்னி; குமரித் தீர்த்தம். சரச்சுவதி - சரசுவதி தீர்த்தம். கோமி - உமாதேவி; கோமி என்பது கௌமி; கௌமாரி என்பதன் திரிபு என்பர்.

9. சிரமம் - வருந்திச் செய்யும் இயமம், நியமம் முதலியன. பயிற்றுமின் - வழிபடுவீராக. குரவன் - குருமூர்த்தி.

10. அன்று - இராவணன் கயிலைமலையை எடுத்த அக்காலத்து. நக்கு - நகைத்து. கொன்று - வருத்தி. கேட்டான் - கேட்ட சிவபெருமான் (உறையும்).

# திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம்*

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### தேவாரம்

### திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலும்
கடல்நஞ்சம் உண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

கானல்இளங் கலிமறவ னாகிப் பார்த்தன்
கருத்தளவு செருத்தொகுதி கண்டார் போலும்
ஆன்நல்இளங் கடுவிடையொன் றேறி அண்டத்(து)
அப்பாலும் பலிதிரியும் அழகர் போலும்
தேனலிளந் துவலைமலி தென்றல் முன்றில்
செழும்பொழிற்பூம் பாளைவிரி தேறல் நாறும்
கூனல்இளம் பிறைதடவு கொடிகொள் மாடக்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 2

நீறலைத்த திருவுருவும் நெற்றிக் கண்ணும்
நிலாஅலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன் தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்

---

*திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்: கும்பகோணத்திலுள்ள ஸ்ரீ நாகேசுவர சுவாமி கோவில்.

1. சொல் - புகழ். ஆறு அங்கம் - சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம் என்ற ஆறு வேதாங்கங்கள். சொற்பொருள் - சொல்லும் பொருளும், கொன்மலிந்த - கூர்மையான, கூத்தனார் - இத்தலத்து இறைவனின் சிறப்புப் பெயர்.

2. கலி - செருக்கு. கருத்தளவு செருத்தொகுதி - கருதிய அளவிற்கு ஏற்றவாறு மூண்டெழுந்த போரின் தொகுதி. துவலை - துளி, முன்றில் - வீட்டின் முன்னிடம், தேறல் - தேன்.

ஏறலைத்த நிமிர்கொடியொன்(று) உடையார் போலும்
ஏழுலகுந் தொழுகழல்எம் மீசர் போலும்
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 3

தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலும்
சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலும்
செக்கரொளி பவளவொளி மின்னின் சோதி
செழுஞ்சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்
மிக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாம்
கொக்கினிய கனிசிதறித் தேறல் பாயும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 4

காலன்வலி தொலைத்தகழற் காலர் போலும்
காமனெழில் அழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனில் அறநால்வர்க்கு அளித்தார் போலும்
ஆறொடுபெண் அலியல்லர் ஆனார் போலும்
நீலவுரு வயிரநிரை பச்சை செம்பொன்
நெடும்பளிங்கென் றறிவரிய நிறத்தார் போலும்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்க்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 5

முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி(று) அன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவல் செவ்வாயும் அழகாய்த் தோன்றத்

---

3. நீறலைத்த திருவுருவும்.........புரிவார் - இஃது இறைவன் அடியவர்கட்குக் காட்டியருள்புரியும் திருக்கோலத்தைக் குறித்தது. ஏறு - இடபம். கூறு - இடப்பாகம்.

4. செக்கர் ஒளி - செந்நிறஒளி. செய்யர் - செம்மேனியர். கொக்கு - மாமரம். தேறல் - தேன்.

5. ஆல் - கல்லாலவிருட்சம். நால்வர் - சனகாதி யோகியர் நால்வர். கோலம் - அழகு. நீலவுரு வயிரநிரை.........நிறத்தார் - நீலம், வயிரம், பச்சை, பொன், பளிங்கு ஆகிய இவற்றின் நிறங்கள் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களின் நிறங்களாகும்.

6. முளைஞாயிறு - இளஞ்சூரியன். முறுவல் - புன்சிரிப்பு. துடிகொண்ட - உடுக்கை போன்ற.

துடிகொண்ட இடைமடவாள் பாகங் கொண்டு
சுடர்ச்சோதிக் கடிச்செம்பொன் மலைபோல் இந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 6

காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்கும் காட்சி யொண்ணுச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலும்
சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனல்அனல்கால் பரமா காசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு **வேற்குமரன் தாதை போலும்**
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 7

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூர் உள்ளார்
புறம்பயத்தார் அறம்புரிபூந் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து
**திருவானைக் காவிலோர் சிலந்திக்(கு) அந்நாள்**
**கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்**
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 8

பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பில்
பொறிகிளர்வெண் பூணநூல் புனிதர் போலும்
சங்கரவக் கடல்முகடு தட்ட விட்டுச்
சதுரநடம் ஆட்டுகந்த **சைவர் போலும்**

---

7. காரிலங்கு திருவுருவத்தவன் - கரிய திருமேனி கொண்ட திருமால். கமலத்திற் காரணன் - தாமரை மலரில் இருக்கும் உலகப் படைப்பிற்குக்காரணமான பிரமன். தழற்பிழம்பு - அக்கினிப்பிழம்பு. அவுணர்புரம் - திரிபுரம். பார் இலங்கு புனல். அனல், கால், பரமாகாசம், பரிதி, மதி, சுருதியுமாய்ப் பரந்தார் - இஃது இறைவனின் அட்டமூர்த்தங்களைக் குறித்தது. வேற்குமரன் - முருகக் கடவுள்.

8. பழனம் - திருப்பழனம். திகிரி - சக்கரம்; சுதரிசனம். கோச்சோழர் - உறையூரையாண்ட கோச் செங்கட்சோழன்.

9. புராணர் - பழமையானவர். சைவர் - சிவாகமங்களாலே புகழ்ந்து கூறப்பட்டவர். அங்கரவத்திருவடிக்.........கொடுத்தார் - இது சண்டேசுவரருக்கு அருள்புரிந்த வரலாற்றைக் குறிப்பது.

அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை
அந்தணனை அறளறிந்தார்க்(கு) அருளப் போதே
கொங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 9

ஏவியிடர்க் கடலிடைப்பட்(டு) இளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்தும் உருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலும்
**தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை**
**சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்**
**கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த**
**குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.** 10

செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
தித்திக்குஞ் சிவபவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாகம் ஆக
நிறைந்தமரர் கணம்வணங்க நின்றார் போலும்
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர் போலும்
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீழ் இட்டுக்
குறிகொண்ட இன்னிசைகேட்டு உகந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்த னாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

**சுவாமி** — நாகேசுவரர் ; **தேவி** — பெரியநாயகி.

---

10. ஏறவாங்கி-பிறவிக் குழியினின்றும் கரையேறும்படி மேலெடுத்து. குறி - இலட்சியம். அறுகுணம் - முற்றுணர்வு முதலாகிய ஆறு குணங்கள். பின்னிரண்டடிகள் இங்குள்ள தீர்த்தங்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

11. செறிகொண்ட சிந்தை - தியான உறுதிகொண்ட மனம். பவனம்-உலகம். மறி - மான். மைந்தர் - வலிமையுடையவர், மலங்க - வருந்த.

## திருக்குடந்தைக் காரோணம்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### தேவாரம்

### பண் – தக்கேசி [ 1–ஆம் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

வாரார்கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன்குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோணத்தாரே. 1

முடியார்மன்னர் மடமான்விழியார் மூவுலகும்மேத்தும்
படியார்பவள வாயார்பலரும் பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக் குடந்தைக்குழகாரும்
கடியார்சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே. 2

மலையார்மங்கை பங்கர்அங்கை அனலர்மடலாரும்
குலையார்தெங்கு குளிர்கொள்வாழை யழகார்குடமூக்கில்
முலையாரணிபொன் முளைவெண்ணகையார் மூவாமதியினார்
கலையார்மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே. 3

போதார்புனல்சேர் கந்தமுந்திப் பொலியவ்வழகாரும்
தாதார்பொழில்சூழ்ந் தெழிலார்புறவி லந்தண்குடமூக்கில்

---

* திருக்குடந்தைக் காரோணம் - கும்பகோணத்தில் உள்ள காசி விசுவநாதர் கோயில். இது மகாமகக் குளத்தின் வடகீழ்பால் அமைந்துள்ளது. காயாரோகணம் என்பது காரோணம் என நின்றது. சிவனது திருமேனியில் ஆரோகணம் (ஒன்றுபட்டுப் போதல்) ஆகிய பதி என்பது பொருள். இங்குள்ள மூர்த்தி, கங்கை முதலிய தீர்த்த மாதர்கள் எழுவரையும் அழைத்து வந்து மகாமகத் தீர்த்தத்தில் முழுகச் செய்தருளினர் என்பது புராண வரலாறு.

1. வார் - கச்சு. வார் சடை - நீண்ட சடை. காரார் கண்டம் - கரிய நிறமுடைய நீலகண்டம். எண்டோள் எந்தை - சிவபெருமான்.

2. பரவுதல் - துதித்தல். கடியார் - மணம் வீசுகின்ற.

3. அங்கை அனலர்-கையில் அனலை ஏந்தியவர். மூவாமதி-இளம்பிறை.

4. போது-மலர். கந்தம்-வாசனை. தாது-மகரந்தம். புறவு-சோலை. மாது-அழகு. காளம்-கருமை.

மாதார்மங்கை பாகமாக மனைகள்பலிதேர்வார்
காதார்குழையர் காளகண்டர் காரோணத்தாரே. 4

பூவார்பொய்கை அலர்தாமரைசெங் கழுநீர்புறவெல்லாம்
தேவார்சிந்தை அந்தணாளர் சீராலடிபோற்றக்
கூவார்குயில்கள் ஆலும்மயில்கள் இன்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ் தழகார்குடந்தைக் காரோணத்தாரே. 5

முப்பூர்நலிய நெதியார்விதியாய் முன்னேஅனல்வாளி
கோப்பார்பார்த்தன் நிலைகண்டருளுங் குழகர் குடமூக்கில்
தீர்ப்பாருடலில் அடுநோய்அவலம் வினைகள்நலியாமைக்
காப்பார்காலன் அடையாவண்ணங் காரோணத்தாரே. 6

ஊனார்தலைகை யேந்தியுலகம் பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார் கரியின்உரிபோர்வை
தேனார்மொழியார் திளைத்தங்காடித் திகழுங்குடமூக்கில்
கானார்நட்டம் உடையார்செல்வக் காரோணத்தாரே. 7

வரையார்திரள்தோள் மதவாளரக்கன் எடுப்பமலைசேரும்
விரையார்பாதம் நுதியாலூன்ற நெரிந்துசிரம்பத்தும்
உரையார்கீதம் பாடக்கேட்டங் கொளிவாள் கொடுத்தாரும்
கரையார்பொன்னி சூழ்தண்குடந்தைக் காரோணத்தாரே. 8

கரியமாலுஞ் செய்யபூமேல் அயனுங்கழறிப்போய்
அரியஅண்டந் தேடிப்புக்கும் அளக்கவொண்கிலார்
தெரிய அரிய தேவர்செல்வந் திகழுங்குடமூக்கில்
கரியகண்டர் காலகாலர் காரோணத்தாரே. 9

நாணார்அமணர் நல்லதறியார் நாளுங்குரத்திகள்
பேணார்தூய்மை மாசுகழியார் பேசேலவரோடும்

---

5. பூ - தாமரை. புறவு - நிலம். தே+ஆர் - தேவார்-தெய்வத்தன்மை பொருந்திய. ஆலும் - ஆடுகின்ற.

6. முப்பூர்-பழைய மூன்று ஊர்கள் ; திரிபுரம். வாளி-அம்பு. அவலம்-துன்பம்.

7. ஊனார்தலை - தசை பொருந்திய பிரம கபாலம். நட்டம் - நடனம்.

8. வரை-மலை. மத வாள் அரக்கன்-இராவணன். நுதி-நுனி. வாள்-மந்திர வாள்.

9. கழறி - அறைகூவி. அண்டம் - மேலும் கீழும் உள்ள உலகங்கள். காலகாலர் - யம சங்கார மூர்த்தி.

சேணார்மதிதோய் மாடமல்கு செல்வநெடுவீதிக்
கோணாகரமொன் றுடையார்குடந்தைக் காரோணத்தாரே. 10

கருவார்பொழில்சூழ் தழகார்செல்வக் காரோணத்தாரைத்
திருவார்செல்வம் மல்கு**சண்பைத் திகழுஞ்சம்பந்தன்**
உருவார்செஞ்சொல் மாலையிவைபத் துரைப்பாருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக் கவலைகழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

**சுவாமி**—காசிவிசுவநாதர், சோமநாதர்; **தேவி**—விசாலாட்சி, தேனார்மொழியம்மை.

---

10. நாணார் - வெட்கமில்லாதவராய். குரத்திகள் - சமணப்பெண் துறவிகள். கோணாகரம் - வளைந்த கடல் போன்ற குளம்; மகாமகக்குளம்.

11. சண்பை - சீகாழி. துருவாச முனிவர் சாபத்தால் சண்பைக் காடொன்று தோன்ற, அப்புல்லையே ஆயுதமாகக்கொண்டு யாதவ குமரர் போர் செய்து மடிய, அப்பழி நீங்கத் துருவாசர் பூசித்துப் பேறு பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. கருவார் பொழில் - இருள் நிறைந்த சோலை. கருவார் - கருப்படமாட்டார். இடும்பைப் பிறப்பு - துன்பம் நிறைந்த பிறப்பு.

## III ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குடந்தையில் நிறுவியுள்ள தருமசாசனங்களின் விவரம்

—oo—

### 1. Lower Secondary School, Kottaiyur

### Endowment Rs. 11,500

Deed of Endowment founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., Kasi Mutt Tirupanandal for running a Lower Secondary School at Kottaiyur within the limits of Kumbakonam Municipality in memory of the late Sri-la-sri Kasivasi Swaminatha Swamigal Avergal.

1. This Endowment is called the "Kasivasi Swaminatha Swamigal Lower Secondary School Endowment at Kottaiyur".

2. The Endowment consists of Rs. 11,500 (Rupees Eleven Thousand and five hundred) out of which Rs. 10,000 (Rupees Ten Thousand) is in the shape of 3½% (Three and a half per cent) Non-terminable Government Promissory Notes and Rs. 1,500 (Rupees One Thousand and five hundred) in cash (Number of the G. P. Note MS. 003132 of 3½% Non-terminable Government Loan for Rs. 10,000).

3. The said amount of Rs. 10,000 should vest with the Kumbakonam Municipal Council for the purpose of running a Lower Secondary School i. e., from first form to third form or equivalent standards or classes. The said amount should be administered by the Municipality and the interest earned therefrom should be utilised for the charity.

4. The endowment shall be utilised for the intended purpose and not otherwise.

5. If the school is not started before 1st August 1947 or the standards or forms are not opened by that date, the amount along with interest accrued thereon should revert back to the Donor or to his successors-in-interest.

6. The Municipal Council has got right to reinvest the amount of Rs. 10,000 (Rupees Ten Thousand) which is now in the shape of G. P. Notes in any other approved securities by the Government yielding a higher rate of interest.

7. The endowment of Rs. 1,500 (Rupees One Thousand and five hundred) in cash should be utilised by the Municipality for the purpose of purchasing a suitable site for the construction of a school building. The said Secondary School should be run in that building. The construction of the school building should be started by the Municipality within three years or a reasonable period thereafter after the termination of the War. In case, the construction of the school building is not commenced within the stipulated period this amount of Rs. 1,500 also should revert back to the Donor or to his successors-in-interest.

8. The annual administration report of the school should be prepared and sent to His Holiness the Kasivasi Swamigal Avergal of Kasi Mutt Tirupanandal by the Kumbakonam Municipality every year.

Dated 11—2—45 **(Sd.) Kasivasi Arulnandi Tambiran**

---

NOTE :—The above deed was registered in Tiruvidamurudhur Sub Registrar's Office as Document No. 6 of 1945, of Book 4 Volume 41 pages 92 to 94, on 12-2-1945 (on General Stamp of Rs. 172-8-0).

## 2. ON GENERAL STAMP Rs. 2,250

### Sri Senthil Andavan Feeding Charity at Benares Madura and KUMBAKONAM

### Endowment Rupees One and a Half Lacs

**For stipends for girl-students in Benares Hindu University and in the High Schools at Madura and KUMBAKONAM (South India) (Landed property)**

This endowment is founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., of Tirupanandal in the divine name of Sri Senthil Andavan who blessed Sri Adi Kumaragurupara Swamigal (Founder of Sri Kumaraswamy Mutt at Benares) with divine effulgence to be of extraordinary cultural and charitable service to humanity. The Swamiji, by the blessings of Sri Senthil Andavan who got the power of speech in his 5th year, who sang Kandarkalivenba, who was honoured by being garlanded by Sri Goddess Meenakshi with pearl-necklace at Madura for his inspired songs in Her Praise (Pillaitamil), who composed "Neethinerivilakkam" at the request of King Tirumalai Naick for inculcating wordly wisdom to rich and the poor, who was initiated by Sri Masilamani Desikar in the saintly order of Darmapuram Adinam, who sang Pandaramummanikkovai in praise of that pontiff, who visited the holy shrines of Chidambaram and Tiruvarur, who sang Mummanikkovai and Nanmanimalai, who made a pilgrimage to Benares, and who graced the Tamil world with his Sakalakalavalli Malai and Kasi Kalambakam, rode on a lion when he interviewed the Padusha during the reign of Emperor

Aurangazeb who, having been deeply and devoutly impressed by the greatness of the Swamigal, very liberally helped the Saint in all his activities viz., re-establishment of Sri Viswanath Mandir, erection of Kedarghat and Kedareeswara Mandir on the west bank of the Ganges and founding a charitable institution nearby which are living monuments today of the Swamiji's mental and moral greatness.

2. This endowment is made for grant of stipends to poor and deserving girl students studying in the Benares Hindu University and in the High Schools situated within the municipal limits of Madura and KUMBAKONAM (South India).

3. The following properties have been set apart for the charity viz., 238 acres, 38 cents of nanja, punja and natham lands in Ukkarai, Ammayappan and Thathuvancheri villages of Ukkarai vattam in Kumbakonam Taluk, Tanjore District. The above said property is being enjoyed by us with patta and miras in our name. The estimated value of the property is Rs. 1,50.000 (One and a half lacs) and the present annual income is estimated to Rs. 7,000 (Seven Thousands).

4. The abovesaid property shall as heretofore continue to be managed and enjoyed by us and by our successors-in-interest.

5. The entire annual income from the property excluding Government kist, charges on account of village establishment, usual village samuthayam, maramath charges and usual expenses to village deities such as festivals etc., now estimated to be at Rs. 7,000 a year, shall be utilised for the purpose intended as mentioned below :

6. **Benares Hindu University :**

i. Stipends shall be granted to poor and deserving girl-students of the Arts Course taking up Saiva Siddhantha Philosophy as optional in the Benares Hindu University. If students with Saiva Siddhantha Philosophy as optional are not available girl-students taking other philosophy subjects in the Arts-course shall be selected. If there should be no girl-student in either of these, girl-students with other optionals in the Arts Course shall be selected.

ii. Such stipendiary girl-students shall be chosen by the Vice Chancellor of the University in consultation with the Head of the Department of Studies (in the University) in which the girl is studying.

iii. The number and amount of stipends to be granted annually shall be determined by the Vice Chancellor of the University.

iv. The stipends shall be granted irrespective of religion caste or creed.

v. The stipend may be continued for the same grantee from year to year subject to her proficiency and good conduct and promotion to the higher classes.

vi. A stipendiary student once failing in the annual examination shall not be eligible for award next year.

vii. A sum of Rs. 7,000 from out of the annual net income shall be sent to the Benares Hindu University annually during the first two years and thereafter for similar periods at intervals of every two years for being kept as an auxiliary capital. The Benares Hindu University shall

invest these amounts in the highest interest-yielding Government Securities and the interest thereof shall be utilised for the award of stipends.

viii. The University shall communicate to the Donor and to his successors-in-interest the names and classes and progress of the stipendiary students every year along with a copy of the receipts and expenditure account.

ix. The auxiliary capitals shall be sent to the University subject to the condition that the authorities of the University shall agree to the conditions given above.

**7. High Schools at Madura and KUMBAKONAM :**

i. Stipends shall also be granted to poor and deserving girl students studying in IV to VI Forms in the High Schools situated within the municipal limits of Madura and KUMBAKONAM (S.India).

ii. Stipendiary girl-students in Madura and Kumbakonam shall study and recite the Kandarkalivenba as a necessary qualification to be awarded the stipend.

iii. The stipendiary girl-students shall be selected by the municipal councils in consultation with the Headmasters of the respective schools.

iv. The number and amount of stipends shall be determined by the Donor and his successors-in-interest.

v. The stipends shall be granted irrespective of religion caste or creed.

vi. The stipend may be continued for the same grantee from year to year subject to her proficiency and good conduct and promotion to the Higher classes.

vii. A stipendiary student once failing in the annual examination shall not be eligible for award next year.

viii. Sums of Rs. 7,000 shall be retained as auxiliary capitals for award of stipends in Madura and Kumbakonam respectively and they shall be invested in the highest interest-yielding Government Securities in our name and in the name of our successors-in-interest. Madura shall have the interest on the auxiliary capital in the third year and KUMBAKONAM in the fourth year (1st period of four years), the 5th and 6th (auxiliary capital) shall go to Benares Hindu University, 7th for Madura and the 8th year for KUMBAKONAM (interest) and so on in rotation. The interest from these auxiliary capitals shall be utlised for giving stipends as mentioned above.

ix. The names of stipendiary girl-students and classes in which they are reading shall be communicated to the Donor and his successors-in interest with the certificates of the Headmasters of the respective schools.

8. The endowment shall be administered by us and by our successors-in-interest.

9. This endowment shall not be used for any purpose other than that for which it is intended.

Dated 9—2—48 (Sd.) **Kasivasi Arulnandi Tambiran**

Registered in Tiruvidamarudur Sub Registrar's Office as No. 225 of 1948 of Book 1 Volume 968 pages 91 to 103 dated 11—2—1948.

## 3. Sri Rajaji Abirami Anthathi Endowment at Kambakonam Municipal Council Rs. 3,500

This endowment is founded by His Holiness Sri-la-Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl. of Sri Kasi Mutt, Tirupanandal in the name of His Excellency Sri Chakravarty Rajagopalachariar (widely known as Rajaji) a great Tamil Scholar, Philosopher, Statesman and Governor General of Dominion of India. This endowment is intended for the propagation of 'Abirami Anthathi' among the student population in the High Schools of Kumbakonam, sung about 250 years ago by Abirami Bhatter of Tirukadayur in praise of Goddess Abirami. This endowment shall be styled as "Sri Rajaji Abirami Anthathi Endowment."

2. This endowment shall consist of Government Securities of the face value of Rs. 3,500 bearing interest at 3% and its administration shall vest in the Municipal Council, Kumbakonam.

3. Out of the annual interest derived from the endowed Capital a sum of Rs. 50 and Rs. 40 shall be awarded as Cash Prizes to the best girl students who come out successful in memorising and reciting the 100 songs (Abirami Anthathi) besides in a written and oral test to be held by an examining committee composed of the Head Masters of the respective High Schools from which the students appear and the Municipal Chairman. The balance of interest after meeting other expenses incidental to the holding of the examination shall be added to the corpus of the fund.

4. The competition shall be opended only to the girl students of the High Schools within the municipal limits of Kumbakonam irrespective of religion, caste or creed and the examination shall consist of two papers, the first part of which shall be written for which 50 marks will be set

apart and second oral for which another 50 marks will be allotted.

5. The Municipality of Kumbakonam shall in each year (July) invite applications from the candidates through the Head Master of their respective Schools who shall hold a preliminary examination for the selection of the best girl students and present them for the final examination to be conducted by the examining committee (in December). The decision of the majority is final.

6. The prize winners of one year shall not compete for the prize a second time.

7. The Municipality shall communicate the result of the examination to the Donor or his Sucessors-in-interest and the school authorities concerned.

8. The prize shall be awarded on the Masi Makham day in a place where the committee decides to fix and the committee shall send each year an account of receipts and expenditure to the Donor or his successors-in-interest along with the names of the prize winners.

9. The endowed capital shall not be diverted to any purpose otherwise than as stated above.

10. The Donor or his Successors-in-interest reserve the right of revoking the endowment if it is not used for the object stipulated.

11. If in any year the prize is not awarded, the unexpended prize amount shall be awarded in the next year along with the annual prize to the two prize winners in the ratio 5 : 4 as between the first and second.

Dated 16—4—48. (Sd.) **Kasivasi Arulnandi Tambiran**

---

The above endowment has been accepted by the Municipal Council Kumbakonam in the resolution No. 659 dated 24—5—48.

## 4. ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு, கும்பகோணம்

### மூலப்பொருள் ரூ. 5000

செந்திலாண்டவன் திருவருட் பெருக்கினுல் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியவரும், மதுரையில் திருமலைநாயக்கர் வேண்டுகோளினுல் திருக்குறட் சாரமாகிய நீதிநெறிவிளக்கம் என்னும் நூலை அருளியவரும், இன்னும் பல தமிழ்ப் பிரபந்தங்களைப் பாடியருளியவரும் ஆகிய **ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள்** அவர்களை நினைவுகூர்ந்து மாணவர் உய்தற்பொருட்டும், நீதி நெறி விளககத்தில் வகுத்த அற நெறியை மாணவர்கள் கடைப்பிடித்து ஒழுகுதற்பொருட்டும், **திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இப்பரிசு நிறுவப்பெற்றது. இது '**ஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு**' எனப்பெறும்.

2. இதற்குரிய மூலப்பொருள் ரூ.5000 (ரூபாய் ஐயாயிரம்). இத்தொகை நூற்றுக்கு 3½ வீதம் வட்டி தரக்கூடிய 10 ஆண்டுக் கருவூலச் சேமவைப்புத்தாள் (டிரஷரி சேவிங்ஸ் சர்டிபிகேட்) களில் முதலீடு செய்யப்பெறும். இது கும்பகோணம் நகர மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. மூலப்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 175. இவ்வட்டித் தொகையிலிருந்து (ரூ. 60, ரூ. 50, ரூ. 40 என) ரூபாய் 150 பரிசு ஆக அளிக்கவும், ரூ. 10 தேர்வு நடத்தும் செலவுக்கெனவும் பயன்படுத்தப்பெறும். எஞ்சிய தொகை ரூ. 15 சேமித்து வைக்கப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. கும்பகோணம் நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர் நிலைக் கல்விக் கூடங்களில் 5, 6-ம் அமைவு (பாரம்) களில் படிக்கும் ஆண் பெண் இருபாலாருக்கும் (சாதி, மத, குல) வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதிநெறிவிளக்கம் எனும் நூலிலுள்ள 102 வெண்பாக்களையும் மனப்பாடம் செய்திருத்தல் வேண்டும்.

இ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு; 50 கூறுகள்; இரண்டு மணி நேரம்; நீதி நெறிவிளக்கம் 102 பாடல்களில் கண்ட பொருளைப் பற்றியும், சொற்சுவை, பொருட்சுவைகளைக் குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு; 50 கூறுகள்; அந்த 102 பாடல்களையும் (தேர்வுக்குழுவினரால் கேட்கப்பெறும் பாடல்கள்) மனப்பாடமாக (சொற்பொருள் விளங்குங்வண்ணம்) ஒப்புவிக்கவேண்டும்.

ஈ. இப்பரிசுத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். கும்பகோணம் நகர ஆட்சி மன்றத்தலைவரும் (சேர்மென், முனிசிபல் கவுன்சில்), கும்பகோணம் நகர ஆட்சி ஆணையரும் (கமிஷனர், கும்பகோணம் முனிசிபாலிடி), பரிசுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீகாசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் (பிரின்ஸிபால்) அவர்களும் இத் தேர்வுக்குழுவின் உறுப்பினர் ஆவர்.

உ. பரிசுகளுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் கும்பகோணம் நகர ஆட்சி ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும். இருவகைத் தேர்வுகளும் டிசம்பர் மாதத்தில் நடத்தப்பெறவேண்டும்.

ஊ. மேல் (இ) பிரிவில் குறித்தவாறு நடத்தப் பெறும் இரு தேர்வுகளிலும் சேர்ந்து பெறும் கூறுகளில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற்பரிசு ரூ. 60 (ரூபாய் அறுபதும்), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 50 (ரூபாய் ஐம்பதும்), மூன்றுவது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 40(ரூபாய் நாற்பதும்)ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

எ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு, ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக் கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வவர் தலைமையாசிரியர் முதனிலைத்

தேர்வு நடத்தி, அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (இ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு அனுப்புதல் வேண்டும்.

ஏ. ஒரு முறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற்குரியவர் அல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன் நிறுவப்பெற்று, குடந்தை நகர ஆட்சி மன்றத்தினர் பரிபாலித்துவரும் ஸ்ரீ இராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு அளிக்கப்பெறும் நாளாகிய **மாசி மகத்து நாளில்** இப்பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசு அளித்தல், தேர்வு நடத்துதல் முதலியவைகளுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். வட்டி வரவுக்கு ஏற்றவாறு பரிசுத்தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. இப்பொருளை முதலீடு செய்துள்ள சேமவைப்புத்தாள்கள் தவணை முடிந்து இத்தொகை திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசு அளித்த தொகை இவ்வளவு எனவும், பரிசு பெற்றவர் விளக்கத்தையும், இக்கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பி வரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்தல் கூடாது. இப்பரிசுகள் தொடர்ந்து அளிக்கப்பெறாவிடின் இக்கட்டளையை மாற்றியமைக்க இதை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் உரிமை உண்டு.

---

**குடந்தை நகராட்சி மன்றம் தம்முடைய ந. ம. மு. (எம். சி. ஆர்.) எண் 230, 30—8—1951-உ தீர்மானத்தால் இந்நிதியை ஏற்று நடத்த ஒப்புறுதி யளித்தது. மூலப்பொருள் குடந்தை நகராட்சி ஆணையர் அவர்களின் 10298/51 எண்ணுள்ள 7—9—51-ந்தேதி கடிதத்தால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.**

---

Registered at Tiruvidamarudur Sub-Registrar's Office on 8—9—51 as No. 50 of 1951, Book No. 4. Volume 44, pages 31—34.

## 5. Mahatma Gandhi Memorial Cow Prize at Kumbakonam Endowment Rs. 1,000

This endowment is founded by Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in memory of the late Mahatma Gandhi, the lover of all humanity and the father of the Indian Nation. This prize is instituted to perpetuate the memory of the holy Saint Mahatma Gandhi who loved all irrespective of religion, sex, caste or creed as the cow benefits one and all.

2. The endowment shall consist of Rs. 1,000 in cash the receipt of which was acknowledged by communication of a copy of the resolution of the Executive Committee held on 25—2—48 with Sri P. Venkatarama Iyer, Revenue Divisional Officer, Kumbakonam as President and Sri N. Ramadas Iyer as Secretary and Treasurer and its administration shall be vested in the Society for the Prevention of Cruelty to animals, Kumbakonam. The endowed capital shall be invested in the highest interest yielding approved Government Securities.

3. The interest accruing on the fund above referred to shall be utilised for the best cow exhibited in the cattle exhibition held by the S. P. C. A. every year at Kumbakonam.

4. If for any reason, the prize is not awarded in any year or years, the amount accumulated shall be awarded to the best cow exhibited in the succeeding year with the usual prize amount.

5. The name of the recipient of the prize shall be communicated every year to the Donor and to his successors-in-interest.

This endowment shall not be diverted to any purpose other than the one intended.

Dated 21—4—48 **(Sd.) Kasivasi Arulnandi Tambiran**

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 23—4—48 (on Rs. 15 stamp) as document No. 20 of 1948 Book No. 4 Volume 42 Pages 135—137.

## 6. Mahamahoupadyaya Brahma Sri Dr. U. V. Swaminatha Iyer Scholarship at Government College, Kumbakonam

1. This Scholarship was founded by His Holiness Sri-la-sri Kasivasi Saminatha Thambiran Swamigal Avl., of Tirupanandal in memory of Mahamahoupadyaya Brahma Sri Dr. U. V. Swaminatha Iyer Avl., Late Senior Tamil Pandit of Government College, Kumbakonam and distinguished Tamil Scholar.

2. The Scholarship shall be styled, "Mahamahoupadyaya Brahma Sri Dr. U. V. Swaminatha Iyer Scholarship."

3. It shall be administered by the Executive Committee of the Old Boys' Association of the Government College, Kumbakonam. If at any time, for any reason the administration by the Committee cannot be continued the Fund shall be administered by the Principal of the Government College in consultation with the College Council.

4. It shall be competent to the administering authority referred to in clause 3 to award the Scholarship to a poor Non-Brahmin student of the Saivite Sect studying in the Intermediate class—Science Group of the Government College, Kumbakonam whose second Language is Tamil and to continue the Scholarship in the Intermediate and B. A. courses under the terms of award given below:

5. The Scholarship shall be tenable for a period of four years.

6. It shall be tenable with effect on and from the 1st day of July 1943.

7. The annual value of the Scholarship shall be Rs. 130 (Rupees one Hundred and Thirty) while the holder thereof is in the Intermediate Science Group classes and Rs. 170 (Rupees

One Hundred and Seventy) while in the B. A. classes in the Science Group with Tamil as his Second Language in the entire course i. e., an aggregate sum of Rs. 600 (Rupees Six Hundred only) for a period of four years. It shall be disbursed annually in three instalments at the beginning of each term to cover the necessary college fees for that term.

8. The following are the terms of award of Scholarship :

(*a*) It shall be awarded to a poor Non-Brahmin student of the Saivite Sect admitted into the Intermediate Class in the Science Group in Kumbakonam College who out of all such students in the said class has obtained the highest number of marks in Tamil in the S. S. L. C. Examination.

(*b*) It shall be continued so long as the holder obtains promotion to the Senior Class and passes the University Examination in the Intermediate and prosecutes his studies in the Science Group of the B. A. course of the Government College, Kumbakonam and shows satisfactory progress.

(*c*) It shall not be continued if the holder thereof fails either to obtain promotion to the Senior Classes in the Intermediate and B. A. course or to pass the University Examination in the Intermediate. It shall be competent to the Principal of the Government College to declare that the holder of the scholarship has forfeited it for misconduct irregular attendance or unsatisfactory progress in his studies. The decision of the Principal shall be final.

(*d*) If in any year the scholarship is forfeited by the holder thereof for failure to secure promotion to the Senior classes in the Intermediate and

B. A. Courses or to pass the University Examination in the Intermediate or for other reasons it shall be awarded to a poor Non-Brahmin Saivite student in the Junior Intermediate class who subject to the conditions in para 8a *supra* has obtained the highest number of marks in Tamil.

(*e*) If at any time no Saivite student is available in the Science Group or the Science Group in the Intermediate or the B. A. classes be abolished, the scholarship shall be awarded to a Saivite student of any other Group subject to the conditions and terms as above.

(*f*) If no Non-Brahmin-Saivite student be available in any year the scholarship shall be awarded to any other Non-Brahmin Hindu student.

(*g*) If two or more students have equal claims to the scholarship it shall be awarded to that student who in the opinion of the Executive Committee of the Kumbakonam Government College Old Boy's Association or the authority administering the Fund is most fitted to receive it.

9. All awards of scholarship or changes in the award shall be intimated to the Donor or to his Successors-in-interest as and when they are made.

We accept the conditions for the award of scholarship.

(Sd.) T. K. ARAVAMUDHA IYENGAR,
*Secretary on behalf of the Executive Committee.*
10—2—1943.

---

*Note*: The Endowment for the purpose has been made. Vide Endowment No. 10 in the list of endowments printed elsewhere in this booklet.

## 7. The Raja of Karvetnagar Sri Venkata Perumal Rajalingaru Memorial Feeding Charity at Kumbakonam

**Capital Rs. 3500**

This endowment is founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal avergal, Kasi Mutt, Tirupanandal in memory of Sriman Mahamandaleswara Katara Salwa Makaraju Umade Raja M. R. Ry Venkata Perumal Raja Bahadur Dev Maharajulingaru, the Raja of Karvetnagar who made the gift of Chavarambaka village, Narayanavanam Taluk, Karvetnagaram to our Predecessor-in-title Sri Kasivasi Sadayappa Tambiran Swamigal avergal in the year 1817 A.D. (Salivahana year 1739; Easwara year Jeshta month S. 15 Friday) by a gift deed for feeding Brahmins at Kumbakonam. Now that under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948–Madras Act XXVI of 1948, the said village was taken over by Government and a cash compensation of Rs. 3185/- (Rs. Three thousand, one hundred and eightyfive only) in respect of the said village was deposited with the Estates Abolition Tribunal, Chittoor, by the Government and that on a petition put in by His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal avergal. Proprietor & Trustee of the village in O. P. No. 2037 of 1953 before the Tribunal, Chittoor for the payment of the amount and the same having been paid to him, this endowment is made in memory of the said Sri Venkata Perumal Rajalingaru of Karvetnagar for feeding Brahmins on the Masi Makham day every year at Kumbakonam. This endowment shall be styled as "The Raja of

Karvetnagar Sri Venkata Perumal Rajalingaru Memorial Feeding Charity at Kumbakonam."

2. This endowment consists of Government Promissory Notes to the face value of Rs. 3500/- (Rs Three thousand five hundred only) fetching interest at 3% per annum, purchased from out of the compensation amount received from the Government (3% Conversion Loan of 1946) G. P. Note No. CA. 112521 for Rs. 500/- CA. 132812 for Rs. 1000/- and CA. 135571 for Rs. 2000/- total Rs. 3500/- The administration of the fund shall vest in us and our successors in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for feeding Brahmins in Tula month on the Masi Makham every year at Kumbakonam.

4. The feeding shall be conducted in accordance with the Thitta Japtha prepared at the time each year which will depend upon the amount of interest realised and the price of commodities then current.

5. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

Tirupanandal,<br>2nd Jan. 1954

(Sd) **Kasivasi Arulnandi Tambiran**

---

Note:—Registered at Tiruvidamarudur Sub Regisrar's Office on 2—1—54 as No. 1 of 1954 in Book No. 4 Volume 45 Pages 47-48.

## IV திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவராக் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும் பொதுமக்களின் அனுகூலத்துக்காகவும் மனமுவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூபாய் |
|---|---|---|
| 1. | சிவஞானசித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ... | 15,000 |
| 2. | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ... | 11,500 |
| 3. | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 4. | சேரமான் பெருமாள் தேவாரப்பரிசு, கொச்சி ... | 5,000 |
| 5. | மூவர் தேவாரப் பரிசு ; சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை ... | 10,000 |
| 6. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க ... | 60,000 |
| 7. | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ... | 30,000 |
| 8. | திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ ... | 1,50,000 |
| 9. | இசைத் தமிழ்க் கல்விக்கு ... | 1,00,000 |
| 10. | திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ... | 20,000 |
| 11. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 10,000 |

| | | |
|---|---|---|
| 12. | இராமேசுவரத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 10,000 |
| 13. | திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ... | 3,000 |
| 14. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... | 17,000 |
| 15. | திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாண வர்கள் உணவு நிதி ... | 1,00,000 |
| 16. | திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... | 66,000 |
| 17. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... | 2,900 |
| 18. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... | 3,300 |
| **19.** | **கும்பகோணத்தில் மணிக்கூண்டு ...** | **25,000** |
| 20. | தஞ்சையில் காச நோய் வைத்தியசாலை ... | 28,500 |
| 21. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 9,000 |
| 22. | மைசூர் மகாராஜா தேவாரப்பரிசு ... | 5,000 |
| 23. | தருமை ஸ்ரீகுருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... | 5,000 |
| 24. | சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை ... | 10,000 |
| 25. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர் எஸ். ராதா கிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை ... | 20,000 |
| 26. | ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ... | 5,000 |
| 27. | மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ... | 10,000 |
| 28. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல் வேலி மாணவிகட்கு ... | 1,00,000 |
| 29. | ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் (ஜனவரித் திங்கள் 30-ம்நாள்)... | 5,000 |
| **30.** | **ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—ஸ்ரீகாசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ...** | **1,50,000** |

| | | |
|---|---|---|
| 31. | டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... | 3,500 |
| 32. | **குடந்தையில் காந்தியடிகள் பசுப்பரிசு** ... | **1,000** |
| 33. | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி ... | 3,000 |
| 34. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... | 10,000 |
| 35. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... | 5,400 |
| 36. | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... | 1,000 |
| 37. | **குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு** ... | **3,500** |
| 38. | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 39. | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தர்மம் ... | 3,500 |
| 40. | ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி ... | 3,500 |
| 41. | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவுநிதி ... | 35,000 |
| 42. | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... | 12,000 |
| 43. | இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... | 3,500 |
| 44. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ... | 20,525 |
| 45. | பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... | 5,000 |
| 46. | அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ... | 3,500 |
| 47. | ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமார சாமி அன்னதானம் நவராத்திரி விஜயதசமி நாட்களில் ... | 5,000 |
| 48. | ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் நினைவுத் தேவாரப் பரிசு ... | 3,500 |
| 49. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம் போட ... | 7,500 |
| 50. | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ... | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 51. | திருவஞ்சைக்களத்தில் ஆடிச்சுவாதியில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் | ... | 7,000 |
| 52. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் இரண்டாண்டு உதவி நிதி | ... | 23,500 |
| 53. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம் | | 28,000 |
| 54. | 28-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் இரண்டாண்டு உதவி மூலதனம் | ... | 15,500 |
| 55. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் | ... | 15,000 |
| 56. | மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை | ... | 5,000 |
| 57. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் (ஆவணிமூலத்தில்) | ... | 60,000 |
| 58. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ | ... | 2,275 |
| 59. | ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ | ... | 45,000 |
| 60. | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி | ... | 5,000 |
| 61. | பனசைக் கல்லூரியில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு | ... | 5,000 |
| 62. | (6) ஸ்ரீகாசிப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது | ... | 16,000 |
| 63. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்- மதுரை இரண்டாண்டு உதவி மூலதனம் | ... | 14,000 |
| 64. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் | ... | 14,000 |

| | | |
|---|---|---|
| 65. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரா - திருநெல்வேலி இரண்டாண்டு உதவி மூலதனம் ... | 10,000 |
| 66. | **30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ காசி வகையரா - கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம்** ... | 7,000 |
| 67. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை ... | 10,000 |
| 68. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... | 27,975 |
| 69. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... | 10,000 |
| 70. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ... | 8,000 |
| 71. | ஸ்ரீ காசியில் தை மாசத்தில் இந்தியக் குடியரசு தின அன்னதானம் ... | 10,000 |
| 72. | ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி | 1,50,000 |
| 73. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப் பெறுமானம் ... | 50,000 |
| 74. | சண்டேசுவர நாயனர் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாப்பாடி ... | 3,500 |
| 75. | காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ... | 7,000 |
| 76. | திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... | 5,000 |
| 77. | சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதி ... | 35,000 |
| 78. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ... | 3,500 |

| | | |
|---|---|---|
| 79. | கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட... | 7,470 |
| 80. | ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் நிதி ... | 3,500 |
| 81. | பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள் ... | 5,000 |
| 82. | திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில் ... | 7,000 |
| 83. | திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனுர் நினைவு வாசகசாலை நிறுவ | 5,000 |
| 84. | திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... | 35,000 |
| 85. | இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன் மார்க்க சங்க நூல் நிலைய நிதி ... | 5,000 |
| 86. | லால்குடியில் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... | 15,000 |
| 87. | அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசு ... | 5,000 |
| **88.** | **குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு ...** | **5,000** |
| 89. | திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு-சித்திரைச் சதயத்தில் ... | 15,000 |
| 90. | திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ... | 5,000 |
| 91. | ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீ வைகுண்டம் ... | 3,500 |
| 92. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ... | 3,500 |
| 93. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம் சென்னபுரி அன்னதான சமாஜம் சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 94. | காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்) ... | 5,000 |
| 95. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமி கள் நினைவு அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 5,000 |

| | | |
|---|---|---|
| 96. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 97. | திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... | 6,400 |
| 98. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 99. | தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... | 5,000 |
| 100. | மணிக்குடியில் கடவூர்க்கலயர் புனற்பந்தர் நிதி | 3,500 |
| 101. | காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்ன தானம் ... | 5,000 |
| 102. | திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 103. | ஸ்ரீ காசியில் பங்குனி மாதத்தில் கமலை ஞானப் பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 5,000 |
| 104. | திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ... | 5,000 |
| 105. | காசியில் சித்திரை மாசத்தில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 106. | ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி ... | 30,000 |
| 107. | செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி ... | 50,000 |
| 108. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி ... | 12,000 |
| 109. | ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு - திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில் ... | 7,000 |
| 110. | ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு (கார்த்திகை மாதத்தில்) ... | 7,000 |
| 111. | சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசுநிதி ... | 5,000 |
| 112. | தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... | 5,000 |
| 113. | மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... | 5,000 |

| | | |
|---|---|---|
| 114. | திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தரும நிதி, தத்துவாஞ்சேரி ... | 3,500 |
| 115. | காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி - மிருக சீருஷம் ... | 7,000 |
| 116. | திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 5,000 |
| 117. | ஸ்ரீ காசியில் சுந்தரர் நினைவு ஆடிமாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... | 7,000 |
| 118. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைப் பரிசு—அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் ... | 1,000 |
| 119. | சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு ... | 5,000 |
| 120. | வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முது மொழிமேல் வைப்புப் பரிசு—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் ... | 3,500 |
| 121. | காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... | 6,000 |
| 122. | மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு ... | 5,000 |
| 123. | திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி ... | 5,000 |
| 124. | சீகாழியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பால் நிதி ... | 3,500 |
| 125. | திருவண்ணாமலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு ... | 5,000 |
| 126. | கல்கத்தா சர்வகலாசாலையில் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் தமிழ்ப் பரிசு நிதி ... | 3,500 |
| 127. | தில்லையில் பல்லாண்டு விளக்கு நிதி (கட்டிடம்) ... | 5,000 |
| 128. | ஸ்ரீ காசியில் அரிமர்த்தன பாண்டியன் நினைவு ஆவணித் திங்கள் அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 129. | ஸ்ரீ காசியில் திருமூலர் நினைவு ஐப்பசித் திங்கள் அன்னம் பாலிப்பு ... | 7,000 |

| | | |
|---|---|---|
| 130. | காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கமலை வெள்ளியம்பல வாண முனிவர் முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு ... | 5,000 |
| 131. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசுவரர் கொள்ளிடத் தீர்த்த விழா நிதி (கட்டிடம்) ... | 12,000 |
| 132. | இராமேசுவரத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ பொம்மராஜு ஸ்ரீ மகாராஜுலிங்காரு நினைவு அன்னதானம் ... | 5,000 |
| 133. | கும்பகோணத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ வெங்கடப்பெருமாள் ராஜுலிங்காரு நினைவு அன்னதானம் (மாசி மகத்தில்) ... | 3,500 |
| 134. | திருவண்ணாமலை (பராசக்தியம்மன் சன்னிதியில்) திருவெம்பாவை சலவைக்கல் பதிப்பு ... | 2,500 |
| 135. | சிதம்பரத்தில் திருப்பல்லாண்டு சிவபுராணம் சலவைக்கல் பதிப்பு, திருவெம்பாவை எழுத்து, தேர்ச் சீலைகள், தேர்க் கொட்டகை, **ஒலி பெருக்கி** வகையரா ... | 14,500 |
| 136. | (கும்பகோணம்) திருப்புறம்பயம் சாட்சி நாத ஸ்வாமி தேவஸ்தானம் திருப்பணி, மின் விளக்கு, தேர்ச்சீலை வகையரா ... | 7,700 |
| 137. | திருச்செந்தூர், சுவாமிமலை, காஞ்சிபுரம் குமரகோட்டம், ஏகாம்பரநாதர் தேவஸ்தானம், மயிலாப்பூர் காபாலீசுவரர்கோயில், திருத்தணிகை ஆகிய தலங்களில் "**சிவ சிவ**" ஒளிவளர் விளக்கு அமைக்க ... | 2,500 |
| 138. | தில்லையில் (சிதம்பரத்தில்) ராஜராஜ அபய குலசேகர சோழன் நினைவு தேவார வைப்பு நிதி (கட்டிடங்கள்) ... | 16,000 |
| 139. | திருப்பனந்தாளில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசை நிதி (வைகாசி அமரபக்ஷம் திருதியை) நிலப் பெறுமானம் ... | 1,00,000 |
| 140. | காஞ்சிபுரத்தில் ஸ்கந்த ஷஷ்டி விழாவில் கந்த புராண பிரசங்க நிதி ... | 3,500 |

## V குடந்தையில் நிறுவிய தருமங்களின் படிக்கு ஸ்ரீ காசிமடத்துப் பரிசுகள் பெற்றவர் விவரம்

—oo—

### I இராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு, கும்பகோணம்

**1948-லும் 1949-லும்**

| | | |
|---|---|---|
| வி. வாலாம்பாள்-நகர உயர்நிலைப்பள்ளி | V பாரம் I பரிசு | ரூ. 50 |
| எ. எஸ். சரோஜினி-நகர உயர்நிலைப்பள்ளி | IV பாரம் I பரிசு | ,, 50 |
| வி. மனோன்மணி-நகராட்சி உயர்நிலைப்பள்ளி | IV பாரம் II பரிசு | ,, 40 |
| எஸ். மைதிலி-பாபநாசம்துறை உயர்நிலைப்பள்ளி | V பாரம் II பரிசு | ,, 40 |
| ஆர். அம்புஜம்-நகர உயர்நிலைப்பள்ளி | V பாரம் தனிப்பரிசு | ,, 25 |

**1950-ல்**

| | | |
|---|---|---|
| என். ஞானம்பிகை-நகராட்சி உயர்நிலைப்பள்ளி | IV பாரம் I பரிசு | ரூ. 50 |
| என். எஸ். இந்திரா-நகர உயர்நிலைப்பள்ளி | IV பாரம் II பரிசு | ,, 40 |

**1951-ல்**

| | | |
|---|---|---|
| எஸ். வேம்பு-நகர உயர்நிலைப்பள்ளி | IV பாரம் I பரிசு | ரூ. 50 |
| கே. பத்மா-நகர உயர்நிலைப்பள்ளி | V பாரம் II பரிசு | ,, 40 |

**1952-ல்**

| | | |
|---|---|---|
| கே. கல்பகம்-நகர உயர்நிலைப்பள்ளி | V பாரம் I பரிசு | ரூ. 50 |
| ஆர். நாகலெக்ஷிமி-பாபநாசம்துறை உயர்நிலைப்பள்ளி | V பாரம் II பரிசு | ,, 40 |

### II செந்திலாண்டவன் அன்னதானம், கும்பகோணம்

(கந்தர் கலிவெண்பாப் போட்டித் தேர்வு)

See page 22-23 of this booklet

| | 1951-52 | 1952-53 | 1953-54 |
|---|---|---|---|
| V. ஸரஸ்வதி-அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி | ரூ. 70 | ரூ. 70 | ரூ. 70 |
| R. தனலட்சுமி அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி | ரூ. 70 | ரூ. 70 | ரூ. 70 |
| S. சத்யபாமா-நகராட்சி உயர்நிலைப்பள்ளி | ரூ. 70 | ரூ. 70 | ரூ. 70 |

### III கும்பகோணம் அரசினர் கல்லூரியில்

உ. வே. சாமிநாத ஐயர் நினைவு உபகாரச் சம்பளம்

| | | | |
|---|---|---|---|
| 1948—49 | V. சுந்தரமூர்த்தி | | ரூ. 170 |
| 1949—50 | S. சிவப்பிரகாசம் | I. U. C. | ,, 170 |
| 1950—51 | ஷை | II. U. C. | ,, 130 |
| 1951—52 | ஷை | III. B. A. | ,, 170 |
| 1952—53 | ஷை | IV. B. A. | ,, 170 |
| 1953—54 | R. இராமதாஸ் | I. U. C. | ,, 130 |

### IV ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு, கும்பகோணம்

**1952-ல்**

| | | |
|---|---|---|
| ஏ. வி. வரதராசன்-பாபநாசம்துறை உயர்நிலைப்பள்ளி | V பாரம் I பரிசு | ரூ. 60 |
| பி. தர்மராசன்-நகராட்சி உயர்நிலைப்பள்ளி | V பாரம் II பரிசு | ரூ. 50 |
| கே. லலிதா-அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி | V பாரம் III பரிசு | ரூ. 40 |

## VI ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளால் ஐந்து ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள்பெற்றார்; மதுரை மீனாட்சியம்மைமீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார்; திருமலை நாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க "நீதிநெறி விளக்கம்" என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை' பகர்ந்தார்; ஆரூர் வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினார்; காசி சென்று '**சகல கலா வல்லி மாலை**', 'காசிக் கலம்பகம்' முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச்சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத் துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பல வாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்யாகுருவாகத் திகழ்ந்தார்.

இச்செயற்கரிய செயல்கள் புரிந்த முனிவர் பெருமானின் நினைவு உலகுக்கு நன்னெறிகாட்டி இன்பந் தருவதாகும்.

இவர் காலம் கி. பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

---

## VII சகல கலாவல்லி மாலை

### ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்

அருளிச்செய்தது

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே! கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே! சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோ? உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே! சகல கலாவல்லியே! 3

---

1. வெள்ளையுள்ளம் - மாசற்ற மனம். அளித்துண்டான் - திருமால். ஒழித்தான் - உருத்திரன். உண்டாக்கும் வண்ணம் கண்டான் - பிரமன், கலைமகள் நாவிற்கும் மனத்திற்கும் இனிமை தருபவள் ஆதலின், அவளைக் 'கரும்பே' என்றார். சகல கலாவல்லி-எல்லாக்கலைகளிலும் வல்லவள்; சரசுவதி.

2. பொருட்சுவை - சிறந்த கருத்தினைக் கண்டபோது உண்டாகும் இன்பம். சொற்சுவை - கருத்தினை மிகப் புலப்படுத்தும் செஞ்சொல்லைக் கண்டபோது உண்டாகும் இன்பம். நாற்கவி - ஆசு. மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைச் செய்யுள். ஐம்பால் - கூந்தல். இங்குக் கரும்பு குன்றையும் காட்டையும் சுமந்திருத்தலும், பங்கய மலரிலே கொடியிருத்தலும் ஒரு வியப்பு ஆகும்.

3. அளிக்கும் - (நின்னால்) அருளப் பெறும். செழுந் தமிழ் - செவ்விய தமிழ்: செந்தமிழுமாம். ஆர்ந்து - (நிறைய) உண்டு. அருட் கடலில் குளித்தல் - கலைமகளின் திருவருட்குத் தகுதியாதல். பனுவல் புலவோர் - நூலறிவினையுடைய புலவர்களாகிய மேகங்கள். புலமை - தேர்ந்த அறிவு; அதனையுடையவர் புலவர். கவிமழை - கவியாகிய மழை. கலாபம் – தோகை; மயில் மழையைக் கண்டு களித்தல் இயல்பு. குளித்து உண்ணுதல் வழக்கமாக இருக்க, இங்கே உண்டு குளித்தலை விரும்பியது ஒரு நயமாம்.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே! சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னே?நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்! சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்;எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்! சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்;உளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே! சகல கலாவல்லியே! 7

---

4. தூக்கும் - ஆராய்தற்குரிய. பனுவல் துறை - (தமிழ்) நூல்களிலுள்ள அகப்பொருள், புறப்பொருள் என்ற பாகுபாடுகள். கல்வி - (நூல்களைக் கற்கப் பெறும்) செயற்கை அறிவு. வாக்கு - (எளிதில் கவி இயற்றும்) இயற்கை அறிவு. தொண்டு - அடிமை; அதனைப் புரிபவர் தொண்டர். செந்நா - உண்மை பேசும் நா : செவ்விய நா.

5. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. இது பெண்களின் பாதங்களுக்கு அழகும் குளிர்ச்சியும் தரும்பொருட்டுப் பூசுதல் மரபு. பங்கேருகம் - தாமரை. அஞ்சத் துவசம் உயர்த்தோன் - பிரமன். அஞ்சம் – அன்னப் பறவை. பிரமதேவனுடைய நா வேதம் பயின்ற நா ஆதலின் 'செந்நா. என்றார். கஞ்சம் - தாமரை. தவிசு - ஆதனம்.

6. பண் - இங்கு இசைத்தமிழ்: இது சுருதி, சுரம், வண்ணம் என்னும் மூன்றையும் தழுவி வருவது. பரதம் - நாடகத்தமிழ்: இஃது இயல் இசைகளோடு தாளம், அபிநயம், அணி, சுவை என்னும் நான்கையும் தழுவிவருவது. கல்வி - இங்கு இயற்றமிழ்; இஃது எழுத்து, சொல். பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணம் ஐந்தும் தழுவி வருவது. பனுவல் - இங்குக் கவிகள். இங்கு ஆசிரியர் முத்தமிழ்க் கல்வியும் கவித்துவமும் வேண்டுகின்றார். எழுதா மறை - வேதம். அன்பர் கண்ணும் கருத்தும் - அன்பர்கள் கண்களிலும் மனத்திலும்; அன்பர்கள் காட்சிக்கும் தியானத்திற்கும் எனினுமாம்.

7. பாட்டு - செய்யுள். பொருள் - (செய்யுளின்) கருத்து. பயன் - அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பயன். கடைக்கண் - கிருபா

சொல்விற் பனமும் அவதான முங்கல்வி[1] சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்;நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே! சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்னம் நாணநடை
கற்கும்[1]பதாம்புயத் தாளே! சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ? சகல கலாவல்லியே! 10

சகல கலாவல்லி மாலை

முற்றிற்று

---

நோக்கம். அமுதம் - நீர். ஓதிமம் - அன்னம். பேடு - பெண் பறவை. இங்கே கலைமகளை அன்னமாக உருவகம் செய்தார். அன்னம் பாலையும் நீரையும் பிரித்து உண்ணும் வன்மை உடையதுபோல, கலைமகளும் உலக நாலையும் வீட்டு நாலையும் பிரித்துணரும் இயல்புடையவள் என்க. உலக நாலுக்கு நீரும், வீட்டு நாலுக்குப் பாலும் உவமை ஆகும்.

8. சொல் விற்பனம்-எடுத்துச்சொல்லும் ஆற்றல்; சொற்சாதுரியம். அவதானம் - ஒரே காலத்தில் வினவும் எட்டு, பத்து, பதினாறு முதலிய வினக்களுக்கு விடை அறிந்து சொல்லுதல்: அதாவது ஒரே சமயத்தில் பல வகைத் துறைகளில் கருத்தைச் செலுத்துதல். கல்வி சொல்ல வல்ல - (பிறர்க்குப்) பாடம் போதிக்கவல்ல. செல்வி - செல்வத்தை அளிக்கும் தேவதை ; இலக்குமி.

பா-ம்—[1]கவி சொல்லவல்ல.

9. சொற்கும் பொருட்கும் உயிர் - உண்மையறிவு : இவ்வறிவின் உருவாக இருப்பவள் கலைமகளாகும். மெய்ஞ்ஞானம் - பேரறிவு. நினைப்பவர் - நினைக்கும் ஆற்றலுடையவர். யாவர் - (உன்னடியார் அன்றி மற்றவர்) யார். குஞ்சரம் - குஞ்சத்தினையுடையது ; யானை. குஞ்சம் - தந்தம். பிடி - பெண் யானை. அரசு அன்னம் - சிறப்பு வாய்ந்த அன்னம்.

பா - ம்—[1]பதாம்புயத் தாயே.

10. மண்கண்ட - உலகமுழுவதும் நிழற்றிய. பண் - இங்குச் செய்யுள். படைப்போன் - பிரமதேவன். விண் - தேவலோகம், கண்கண்ட தெய்வம் - பிரத்தியட்சமாகப் பலனைத் தரும் தெய்வம். உளதோ - உண்டோ ; இல்லை என்றபடி. இச்செய்யுள் முதலிரண்டடிகளில் ஆசிரியர் டில்லி பாதுஷாவின் நட்பைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தைக் குறிப்பித்துள்ளார்,

# VIII திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தது

1. பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு
2. நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய்—ஆதிநடு
3. அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
4. குறியும் குணமும்ஒரு கோலமுமற்(று) எங்கும்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்(கு)
5. அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்(கு) எட்டா வடிவாய்த்—தனாதருளின்
6. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்—எஞ்சாத
7. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்
8. இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல்—முந்தும்
9. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரணம்
10. ஆகவரும் இச்சை அறிவுஇயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி—ஏகத்(து)
11. உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்
12. மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
13. தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
14. ஆறத்து வாவு(ம்)அண்டத்(து)ஆர்ந்தஅத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்
15. ஈரிரண்டு தோற்றத்(து) எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள்—தீர்வரிய

16. கன்மத்துக்(கு) ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்(து) உழலத் திரோதித்து—வெந்நிரய
17. சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்
18. தொன்னூல் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
19. விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்(து) —அருள்பெருகு
20. சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்(து)
ஆலோகந் தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்
21. சத்திநி பாதம் தருதற்(கு) இருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப்—பெத்த
22. மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்(று) அருளி—உலவா(து)
23. அறிவுக்(கு) அறிவாகி அவ்வறிவுக்(கு) எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
24. கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்(று) ஓர்திருப்பேர் கொண்டு-திருநோக்கால்
25. ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும்அத்து வாக்கள் இருமூன்றும்—பாழாக
26. ஆணவ மான படலங் கிழித்(து)அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
27. அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
28. தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
29. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்(து)உலவா வின்பம்—மருவுவித்துக்
30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும்மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடத்துப்
31. பூத்த பவளப் பொருப்(பு)ஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த

32. கருமமலக் கட்ட றுத்துக் கண்ணருள் செய்(து)உள்நின்(று)
ஒருமலத்தார்க்(கு) இன்பம் உதவிப்—பெருகியெழு
33. மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்
34. யானெனதென் (று) அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானம்
35. திருவுருவா இச்சை செயலறிவு கண்ணு
அருள துவே செங்கை அலரா—இருநிலமே
36. சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!—மின்னுருவம்
37. தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்
38. துண்ட(ம்)இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்(கு)
அருள்பொழியும் கண்மலர் ஈரா றும்—பருதி
40. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்-வின்மலிதோள்
42. வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வர்உயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
45. பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்
47. வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்—கொந்தவிழ்ந்த

48. வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்
49. தேவர்க்(கு) உதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது
50. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
51. வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த துறங்கில் ஒருகரமும்—மொய்த்த
52. சிறுதொடிசேர் கையு(ம்)மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும்—தெறுபோர்
53. அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத
54. கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொன்
55. புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும்—திருவரையும்
56. நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்(து) அணிந்த பரிபுரமும் — சோதி
57. இளம்பருதி நூறு யிரம்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்(டு)
58. ஆதரிப்போர்க்(கு) ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே!—ஓதியஐந்து
59. ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே!—தாங்கரிய
60. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
61. ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
62. கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி
63. அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்
64. ஆவிப் புலனுக்(கு) அறி(வு)அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ

65. வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வே ! மெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே !—பருவத்(து)

66. அகலாத பேரன்(பு) அடைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

67. பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

68. எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லாது உயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

69. ஈறும் முதலுமகன்(று) எங்குநிறைந்(து) ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதம்

70. தோய்ந்து களித்தோர் துதிக்கையினல் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

71. பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்

72. ஐந்தொழிலும் ஓவா(து) அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்

73. நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

74. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே !—தேசுதிகழ்

75. பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள்

76. வெந்தகுவர்க்(கு) ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ(டு) அதோமுகமும்—தந்து

77. திருமுகங்கள் ஆறுகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறிஆ(று) உய்ப்ப—விரிபுவனம்

78. எங்கும் பரக்க இமையோர்கண்(டு) அஞ்சுதலும்
பொங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்

79. எடுத்தமைத்து **வாயுவைக்கொண்(டு) ஏகுதியென்(று) எம்மான்**
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு

80. பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்(று)

81. அன்னவளுங் கொண்டமைதற்(கு)ஆற்றுள் சரவணத்தில்
சென்னியிற்கொண்(டு) உய்ப்பத் திருவுருவாய்—முன்னர்

82. அறுமீன் முலையுண்(டு) அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்

83. கன்னியொடும் சென்(று)அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்(டு) அவ்வுருவம் ஆறினையும்—தன்னிரண்டு

84. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய

85. முகத்தில் அணைத்(து)உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த

86. வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே !—கிள்ளைமொழி

87. மங்கை சிலம்பின் மணிஒன் பதில்தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்

88. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)

89. அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்(து)-எங்கோன்

90. விடுக்குதிஎன்(று) உய்ப்பஅதன் மீதிவர்ந்(து)எண் திக்கும்
நடத்தி விளையாடு நாதா !—படைப்போன்

91. அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்(று)
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

92. சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறைஇருத்துங் கோமானே !—மட்டவிழும்

93. பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே !—கொன்னெடுவேல்

94. தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே !—சீரலைவாய்த்

95. தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்

96. கயேந்திரனுக்(கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனும்

97. சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே!—காரவுணன்
98. வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்—பானுப்
99. பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்!—சகமுடுத்த
100. வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலம் கீண்ட சுடர்வேலோய்!—போரவுணன்
101. அங்கமிரு கூறாய் அடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்-அங்கவற்றுள்
102. சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே!—மாறிவரு
103. சேவல் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
104. குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்(டு)அளித்த தேவே!-மறைமுடிவாம்
105. சைவக் கொழுந்தே! தவக்கடலே! வானுதவும்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே!—பொய்விரவு
106. காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
107. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்(து) இனிதிருந்து—மேன்மைபெறத்
108. தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே!—உள்ளமுவந்(து)
109. ஆறு திருப்பதிகண்(டு) ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!—நாறுமலர்க்
110. கந்திப் பொதும்பர்எழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே!—சந்ததமும்
111. பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
112. பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையும்—தீதகலா

113. வெவ்விடமும் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம் வந்(து)எம்மை எதிர்ந்தாலும்—அவ்விடத்தில்
114. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்
115. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா(று)
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணம்
116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்
117. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்(து)
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்
118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை
119. எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்
120. இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்(து)
121. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

முற்றிற்று

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 27 | நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம்—ஹிந்தி ... | 0 | 8 |
| 28 | சகல கலா வல்லி மாலை—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... | 0 | 1 |
| 29 | சிவஞான சித்தியார் ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது ... ... | 5 | 0 |
| 30 | ஷை ஹிந்தி மட்டும் ... ... | 1 | 0 |
| 31 | திருக்குறள்—அறத்துப்பால்—ஹிந்தி மொழி பெயர்ப்பு ... ... | 1 | 8 |
| 32 | ஷை பொருட்பால் ஷை ... ... | 2 | 8 |
| 33 | ஷை காமத்துப்பால் ஷை ... ... | 1 | 0 |
| | ஷை மூன்று புத்தகங்களும் சேர்த்து ... | 4 | 0 |
| 34 | திருக்குறள்-கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.. அவர்கள் குறிப்புரையுடன் ... | 0 | 12 |
| 35 | முதுமொழிமேல் வைப்பு—ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... | 0 | 7 |
| 36 | திருவுசாத்தானக் கல்வெட்டுகள் ... | 0 | 6 |
| 37 | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் – மதுரைக் கலம்பகம் – நீதிநெறி விளக்கம் – மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை – மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 12 |
| 38 | திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 4 |
| 39 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட் கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ... | 1 | 0 |
| 40 | பண்டார மும்மணிக் கோவை-காசிக் கலம்பகம் - சகலகலாவல்லி மாலை ... | 1 | 0 |
| 41 | தமிழிசைப்பாக்கள் ... | 0 | 8 |

**கிடைக்குமிடங்கள் :**

1 ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.

2. தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

குறிப்பு : ஷை விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச் சாரும்.

உ

# "குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து

**விரோதி ஆண்டு தை மாதம் முதல்**

மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம், பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

**T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,**

நிர்வாக ஆசிரியர் '**குமரகுருபரன்**'

**மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடம்**

(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)

**ஸ்ரீவைகுண்டம்**

**வருட சந்தா ரூ. 1-8-0** **தனிப்பிரதி 0-2-0**

திருச்சிறுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.